செய்தி வெளியீடு எண் : 25 நாள்:09.10.2021

**தேனி மாவட்டம்**
**தமிழ்நாடு ஊரக உள்ளாட்சி தற்செயல் தேர்தல்கள்-2021-ஐ முன்னிட்டு வாக்குப்பதிவு நடைபெற்ற வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் வாக்கு பெட்டிகள் வைக்கப்படவுள்ள வைப்பறைகள், வாக்கு எண்ணிக்கை மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்:-**

******

தேனி மாவட்டம், கடமலை-மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நரியூத்து ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, ஓட்டணை, முத்தாலம்பாறை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகள், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தெப்பம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, டி.அழகாபுரி, ராஜக்காள்பட்டி, வீருசின்னம்மாள்புரம், ஒன்றிய தொடக்கப்பள்ளிகள், கதிர்நரசிங்காபுரம் அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி ஆகிய இடங்களில் தமிழ்நாடு ஊரக உள்ளாட்சி தற்செயல் தேர்தல்கள்-2021-ஐ முன்னிட்டு இன்றைய தினம் (09.10.2021) வாக்குப்பதிவு நடைபெற்று வரும் வாக்குச்சாவடி மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

அதனைத்தொடர்ந்து, கடமலை-மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஆகிய இடங்களில் வாக்குப் பதிவு பெட்டிகள் வைக்கப்படவுள்ள வைப்பறைகளின் பாதுகாப்பு வசதிகள், வாக்கு எண்ணிக்கைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அறைகள், அதற்கான முன்னேற்பாடு பணிகள் ஆகியன குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

ஆய்வின் போது, அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் கொரோனா வழிக்காட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றப்படுவது, வாக்காளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியன குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், வாக்களிக்க வந்த வாக்களர்களிடம் அவர்களது குடும்பத்தில் உள்ள மற்ற வாக்காளர்களும் தவறாமல் வாக்களித்து 100 சதவீத வாக்குப்பதிவை உறுதிப்படுத்தும்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எடுத்துரைத்தார்.

மேலும், கொரோனா வழிக்காட்டு நெறிமுறைகளை பள்ளிகளில் முறையாக பின்பற்றுதல் குறித்து கடமலை-மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மயிலாடும்பாறை ஊராட்சி வரதராஜுலு மேல்நிலைப்பள்ளியில் மாணவியர்களுக்கு உடல் வெப்ப நிலை பரிசோதனை மற்றும் பதிவேடுகள் ஆகியன குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, பள்ளி ஆசிரியர்கள், மாணவியர்கள் ஆகியோர் கண்டிப்பாக முகக்கவசம் அணிய வலியுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட போ.அம்மாபட்டி, டொம்புச்சேரி மற்றும் உப்புக்கோட்டை ஆகிய ஊராட்சிகளில், மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் தொடர்பாக விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டு, நாளைய தினம் (10.10.2021) மாவட்ட முழுவதும் நடைபெறவுள்ள மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களின் மூலம் இதுவரை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத 18-வயதிற்கு மேற்பட்ட விடுபட்ட நபர்கள், தடுப்பூசி செலுத்திக் கொண்டு, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பினை நல்கிடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு. ஆர்.தண்டபாணி, தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி..**